மாண்புமிகு முதல்வர் அவர்களின் நெருங்கிய நண்பர் எழுத்தாளர் திரு.சாவி அவர்கள் நான் எழுதிய முத்துக்காளத்தி சிந்தனைகள் என்னும் நூலை ஊட்டிக்கு அவரது துணைவியாருடன் வந்திருந்து 1989ம் வருடம் வெளியிட்டார்கள்.

நான் எழுதி கண்ணதாசன் பதிப்பகம் வெளியிட்டுள்ள விண்ணைத் தொடுவோம் நூலின் 50 வது பக்கத்தில் முத்துக்காளத்தி சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழாவில் திரு.சாவி அவர்கள் ஆற்றிய சிறப்புரையின் முக்கிய பகுதியை சேர்த்துள்ளேன். இச்சிறப்புரையை படிப்பவர்கள் தங்கள் திறமையை மேம்படுத்திக்கொள்ள சாவி அவர்களின் அனுபவம் மிகுந்த ஊக்கம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்கள்.

WIN WITH CONFIDENCE, MOTIVATION QUOTE FOR STUDENTS ஆகிய தலைப்புகளில் ஆங்கிலத்தில் சிறிய இரு நூல்களை எழுதியுள்ளேன். எனது நூல்களை திரு. சாவி, திரு.புஜங்கராவ் ஐ.ஏ.எஸ், திரு.ரத்தினசாமி ஐ.ஏ.எஸ், திரு.பெருமாள் ஐ.ஏ.எஸ், ஆகியோர் வெளியிட்டிருக்கிறார்கள் / முதல் பிரதியை பெறுபவர்களாக இருந்துள்ளார்கள்.

மாற்று மருத்துவம் - மன ஊக்குவிப்பு - தொழில் சார்ந்த கட்டுரைகளை சில பத்திரிக்கைகளில் எழுதியுள்ளேன். காளான் வளர்ப்பு பற்றிய கட்டுரை தொடர் கட்டுரையாக தொழில் உலகம் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டது. MOTIVATION பயிற்சிகளை பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கும் பணிக்கான போட்டித்தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கும் நடத்தியுள்ளேன். இதற்காக சன்மானம் ஏதும் பெற்றுக் கொள்வதில்லை.

காவிரி நீர் பங்கீடு சம்மந்தமான நான் எழுப்பிய கேள்விகளுக்கு கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அளித்த விளக்கங்கள் துக்ளக் 15.9.1987 இதழில் 22ம் பக்கத்தில் வெளியானது. அதன் விவரம் முழுவதும் அப்படியே கீழ் கண்டவாறு தங்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழக விவசாயிகளும் எங்கள் சொந்த சகோதரர்களே - ஹெக்டே கூறுகிறார்

ஏ.வசந்த குமார் என்ற துக்ளக் வாசகர் 1½ மாதத்திற்கு முன்னாள் நமக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதில் ராமகிருஷ்ண ஹெக்டேயிடம் அவர் கேட்க விரும்பிய சில கேள்விகளைக் குறிப்பிட்டிருந்தார். காவிரி நீர் சம்மந்தமான அந்தக் கேள்விகளை துக்ளக் வாசகரிடமிருந்து வந்த கேள்விகள் என்று கூறி ராமகிருஷ்ண ஹெக்டேயிடம் கேட்டேன்.

ஹெக்டே அளித்த விளக்கங்கள் :

கேள்வி - நீங்கள் தமிழக முதல்வராக இருந்திருந்து, அப்போது காவிரி நீரைத் தமிழகத்திற்கு தர முடியாது என்று கர்நாடக அரசு கூறியிருந்தால், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? கர்நாடக முதலமைச்சரை நீங்கள் குற்றம் சொல்லியிருக்கமாட்டீர்களா?

ஹெக்டே - 1982-83-ல் கர்நாடகம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் நான் இம்மாநிலத்திற்கு முதலமைச்சர் ஆனேன். அதன் பிறகு தொடர்ந்து ஒவ்வோரு வருடமும்

மேலும் மேலும் கடுமையான வறட்சியால் இந்த மாநிலம் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இங்கு உபரித் தண்ணீர் கூட வேண்டியதில்லை - போதிய தண்ணீர் இருந்திருந்தாலே - தமிழக சகோதர விவசாயிகளின் எதிர்பார்ப்பை நாங்கள் வீணடித்திருக்க மாட்டோம்.காவிரியில் நீர் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆண்டும் கூட 125 அடிகள் இருக்க வேண்டிய நீர் 78 அடியைத்தான் எட்டிப்பிடித்தது. கடந்த 1 வாரமாகத்தான் -மிகக்குறைந்த அளவில்தான் - நீர்மட்டம் உயர்ந்திருக்கிறது. இந்த நேரத்தில் குறைந்தபட்சம் 125 அடியாவது இருந்திருக்கவேண்டும்.

வேறோர் விஷயத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். மிகவும் குறைந்த நீர்பாசன வசதி உளஅள மாநிலங்களில் கர்நாடமும் ஒன்று. 18 சதவிகிதம்தான் இன்றைய நிலை. கர்நாடதக்கிற்கு நியாயமாக சேரவேண்டிய தண்ணீரில் ஒவ்வோரு துளியும் பயன்படுத்தப்பட்டால் கூட ிந்த அளவு மித மிஞ்சி போனால் 30 சதவிகிதம் ஆக வேண்டுமானால் உயரலாம். அதற்குமேல் இங்கு வாய்ப்பே கிடையாது. கிணற்றுப்பாசனம் போன்றவற்றை எடுத்துக்கொண்டால் கூட இதுதான் இங்கு நீர்பாசன நிலை.

நான் தமிழக முதல்வராக இருந்திருந்தால் விவசாயிகளுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தண்ணீருக்காக நான் வாதிட்டிருப்பேன். ஆனால் அதே சமயத்தில் நிலத்திலேயே ஊறி தண்ணீர் வீணாகப் போகாமல் தடுத்து அதையும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பேன்.

கேள்வி - தமிழக முதல்வராக நீங்கள் இருந்திருந்தால் காவிரி நீர் கிடைக்காமல் அங்கே விவசாயம் பாதிக்கப்படும்போது விவசாயிகளின் குறையை எப்படி தீர்த்திருப்பீர்கள்?

ஹெக்டே - நான் சொன்ன மாதிரி தண்ணீர் வீணாவதையும் தடுக்க வழி செய்ய முனைந்திருப்பேன். அது தவிர ஓர் வேளை பயிர்வகை முறைகளை மாற்ற விவசாயிகளைச் சம்மதிக்க வைக்க முயன்றிருப்பேன். எல்லோருமே நெல்லும் கரும்பும்தான் பயிரிட வேண்டும் என்று அவசியம் இல்லை. கிடைக்கும் தண்ணீர் குறைவாக இருக்கும்போது உலகத்தின் பல பாகங்களிலும் விவசாயிகள் செய்வது போல் மாறுதல்களைச் செய்து தொள்ள நாம் முனைய வேண்டும். நிலத்தில் ஊறி வீணாகிவிடும் நீரின் அளவு ரொம்பவும் அதிகம். இதுபற்றிய மிகவும்திட்டவட்டமான கணக்கீடு இல்லை என்றாலும் குறைந்த பட்சம் 100 டி.எம்.ஸி தண்ணீர் இப்படி வீணாகிறது.

சோ - கர்நாடகத்தில் இப்படி நடப்பதில்லையா?

ஹெக்டே - அப்படி இங்கு நடக்க வாய்ப்பே கிடையாதே. இங்கு தண்ணீர் தேங்கவே முடியாது. நிலத்தின் வாகு அப்படிப்பட்டது. தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கும்.

கேள்வி - நீங்கள் பிரதமராக இருந்து தமிழகத்திலும் கர்நாடகத்திலும் உங்கள் கட்சியே ஆட்சியில் இருந்து - அல்லது கர்நாடகத்தில் வேறு கட்சியின் ஆட்சி இருந்து - இந்தப் பிரச்னை எழும்பியிருந்தால் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருப்பீர்கள்?

ஹெக்டே - இரண்டு மாநில முதல்வர்களையும் அழைத்து அவர்களுடன் இரு மாநில விவசாயிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களுடன் அமர்ந்து பேசி இதற்கு ஓர் தீர்வு கண்டிருப்பேன்.

கேள்வி - ஓர் நதி உற்பத்தியாகும் மாநிலம் அந்த நதிநீரை அண்டை மாநிலங்களுக்குத்தர மறுப்பது என்ற பழக்கம் பரவி விட்டால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துவிடாதா?

ஹெக்டே - யாருமே அப்படிச்செய்வதில்லையே. ஓரே மாநிலத்தில் மட்டும் பாயும் நதிகள் இருக்கின்றன. வெவ்வேறு மாநிலங்களில் பாயும் நதிகளும் இருக்கின்றன. இந்த இரண்டாவது வகையான நதிகளின் நீரைப்பொறுத்த வரையில் ததீர்மானிக்கப்பட்ட வரைமுறைகள் உள்ளன. நீர் பங்கீடுக்கான வழஇமுறைகளை அவை நிர்ணயிக்கின்றன. உதாரணத்திற்கு கிருஷ்ணா நதி நீரைப்பற்றி நிறுவப்பட்ட கமிஷன் சில வரைமுறைகளைக்கூறியுள்ளது. அதே போல நர்மதா நதி நீரைப்பறஅறஇயும் வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டன. காவிரி நதியின் நீரும் இதே முறையில் பங்கீடு செய்யப்படலாம். நதி நீரின் அலவுஇ ஓர் மமாநிலத்தில் அதற்குக் கிடைக்கும் நீரின் அளவு,

நீர்ப்பாசன வசதி உள்ள நிலத்தின் அளவு - போன்ற பல விஷயங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இதை முடிவு செய்ய வேண்டடும்.

சோ - இந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஹெக்டே - நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கிறது. ஒன்று நிச்சயமாகச் சொல்கிறேன். தமிழக விவசாயிகளுக்கு நியாயமாக சேர வேண்டிய நீரைத் தருவதற்கு நான் மறுக்க மாட்டேன். நிச்சயமாக அப்படிச் செய்ய மாட்டேன். அவர்களும் எங்களது சொந்த சகோதரர்களே.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தின் STED பணியில் இருந்தபோது TAMIN பணியாளர்களுக்கு நான் அளித்த பயிற்சி பற்றிய கடிதம் அதன் நிர்வாக இயக்குனராக இருந்த திரு. கோவிந்தன் ஐ.ஏ.எஸ், அவர்களுக்கு TAMIN DIVISIONAL MANAGER அவர்களால் அனுப்பி வைக்கப்ட்டது. அக்கடித நகல் அப்படியே கீழ் கண்டவாறு தங்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்ட்டுள்ளது.

## OFFICE OF THE DIVISIONAL MANAGER, TAMIN, KRISHNAGIRI

Rc..No. 3208/E/2001 Date : 17.12.2001

To
The Chairman and Managing Director,
Tamil Nadu Minerals Ltd.,
Chepauk, Chennai-5.

Sir,

Sub: TAMIN – Krishnagiri Division – Motivations Awareness Training Programme Camp – Conducted at Sevathur Mines on 15.12.2001- Report submitted – Reg.

Ref: H.O. Circular Roc.No. 23300/EA4/2001 dt 30.11.2001.

-0O0-

In response to the Circular cited, We submit to inform that we have arranged the motivation, Awareness Training camp on 15.12.2001 from 2.00 P.M. to 6.00 P.M. at Sevathur mines wherein Thiru A. Vasanthakumar, Assistant Evaluation and Research Officer, office of the Science and Technology Entrepreneurship Development Project (STED) Dharmapuri District Development Corporation, Dharmapuri has conducted suitable Motivation Awareness Training Programme. The Divisional Manager, Senior Mines foreman, Technical Staff and Worker of Sevethur Mines were attended in the Training Programme. The faculty has explained in details on the following Topics.

1. Proper Planning, 2. Punctuality, 3. Preference to urgent and time bound work , 4. Will Power, 5. Sincerity, 6. Devotion to duty, 7. Honesty 8. Quality 9.

Accuracy, 10. Team Spirit Work 11. Avoid Communication gap, 12. Inter Personal Relationship 13. Positive Thinking.

The above points have been a explained in depth to the participants by arranging three simple games i.e.., Ball game, Awareness round game, selecting paper ships. This training programme is more useful to all the participants and motivated all the workers. The workers have informed that this training is motivated and created Awareness to them to do their duty better in quarry day - to day activities.

Further, the faculty has explained in detail regarding the indian new economic policy and globalization of world market by which the participants felt that they are in position to work more hard to achieve the sales target for the year 2001-2002.

We also suggest that if we arrange to give motivation training, once in six months which will be more useful to increase the production and achieve the target.

The faculty has informed that he will come and conduct Awareness and assess improvement training camp with free of cost after three months in Krishnagiri Division.

The Photos showing the Training camp held on 13.12.2001 at Chandrapalli workshop is enclosed for the Chairman & Managing Director’s kind perusal and information.

We wish to inform that the Awareness Training camp was completed in respect of Krishnagiri Division.

Thanking you Sir.

Yours Faithfully,
Sd/. DIVISIONAL MANAGER,
TAMIN, Krishnagiri.